**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

...

In the Court of the Principal Assistant Sessions Court, Kancheepuram

| | |
|---|---|
| Sessions Case No | SC.13/2016 |
| Primary Register Case No | |
| Deposition of Witness for | Prosecution P.W. 11 |
| | Defence |
| | Court: |

| | |
|---|---|
| Name | Dhandapani |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of December 2023.

Signature of Witness.

Name of the Interpreter: Logeswari, Head Clerk.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of December, 2023.

Signature of Interpreter.

முதல் விசாரணை—

நான் தற்போது காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.06.2015 அன்று மதியம் 12.00 மணியளவில் நான் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பரிவில் பணியில் இருந்தபோது 51 வயது உள்ள அ.சா.1 மோகன் என்ற நபரை அ.சா.7 வெங்கடேசன் என்ற நபர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை 2 நபர்கள பகல் சுமார் 11.00 மணியளவில் பஞ்சுபேட்டை அருகில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு தலையில் **20x10x8** செ.மீ அளவில் கிழிந்த காயம் இருந்தது. மேலும் தலையில் எலும்பு பகுதியில் அடிபட்டு இருந்தது தெரியவந்தது. அவருக்கு முதல் உதவி அளித்து மேல்சிசிக்சைக்காக செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவரை எஸ்.ஆர்.எம்.மருத்துவ கல்லூரியில், நரம்பியல் மருத்துவர் பரிசோதனை செய்து பின்மண்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதை உறுதிபடுத்தினார். மேலும் இடது பக்கம் மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டுள்ளதையும் கண்டறிந்தார். மேற்கண்ட காயங்கள் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய எனது கருத்துரை அ.சா.ஆ.14 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

7வது எதிரியின் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**1 முதல் 6 எதிரிகளின் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றேன். அ.சா.1க்கு ஏற்பட்டுள்ள 8 செ.மீ ஆழமுள்ள காயம் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் சென்று கூர்மையான இரும்பி கம்பியின் மீது விழும் போது அ்நத காயம் ஏற்பட வாய்ப்புள்ளது.